**ரத்தொட்ட பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 03 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரத்தோட்ட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த கெப் வண்டியின் பெறுமதி ரூபா 5,760,000 குறைவாகவும், 2012 ஆம் ஆண்டின்போது கிடைத்த ரூபா 1,800,000 கிரயமான டெக்ரர் ஒன்றினதும் மீளாய்வாண்டின் போது கிடைத்த டிபர் வண்டியினதும் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 417,000 கூட்டுப் பெறுமதியான 03 இயந்திர உபகரண விடயங்கள் மற்றும் மானியமாகக் கிடைத்த உபபாகங்களுடன் 04 கணனிகள், ஸ்கேனுடன் பிரிண்டர்

மற்றும் நிழற்பட பிரதி இயந்திரம் என்பவற்றின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 06 காணிகளினதும் 29 கட்டிடங்களிலும் பெறுமதி மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 639,458 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட கழிவுப்பொருள் மீள் சுழற்சி நிலையத்தின் பெறுமதி என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை

(ஈ) ரூபா 150,209 கூட்டுப் பெறுமதியான 04 கட்டிடங்கள் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்குகளில் அதற்குரிய சீராக்கங்கள் செய்து கணக்குகளைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) செலுத்த வேண்டிய ரூபா 94,776 தொகையான கடன்கொடுத்தோர் மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 152,662 கூட்டுத்தொகையான 04 கடன்கொடுத்தோர் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து உக்குவெல பிரதேச சபைக்குக் கிடைத்த அந்த சபையினால் ரத்தொட்ட பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 296 கல்வனைஸ் குழாய்களில் சபையில் காணப்பட்ட 130 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதியான ரூபா 143,910 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 9,984,786 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 540,477 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

17 வருடங்கள் முதல் மாற்றமின்றி முன்கொண்டு வரப்பட்ட ரூபா 15,462 தொகையான தொங்கற் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 47,132,165 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,328,811 கூட்டுத்தொகையான 06 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 42,027,350 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 4,207,443 கூட்டுத்தொகையான 04 மீதிகளும் அதில் உள்ளடங்கி உள்ளது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 75,804,282 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(i) மற்றும் (xi) பிரிவுகள் மற்றும் 1986 யூன் 17 ஆந் திகதிய 1986/6 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது பிரதேச சபைக்குச் சொந்தமான காணியொன்று ரத்தொட்ட மக்கள் வங்கிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 50 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை<br>-------------------------------------------------- | |
| (i) விதி 114 | நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டத்திற்காக ரூபா 550,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணத்தை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக் வில்லை. |
| (ii) விதி 218 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக மெய்மெய்யாய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சபையின் ஆதனங்கள் முறையற்ற வகையில் வாடகைக்கு வழங்கப்பட்டு அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக இடமளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே சபைக்குரிய ரத்தொட்ட பொலீஸ் அமைந்துள்ள காணி கையளிக்கப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 570 மற்றும் 571 ஆம் பிரமாணங்கள் | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,522,915 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பான தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் சுற்றிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமல் படிகளைப் பெறுகின்ற 07 ஊழியர்களுக்கு நிரந்தரப் பதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்படாத பதவிக்காக 13 நபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவு

---

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,540,055 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,759,963ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 780,092 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்

---

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 ஆண்டுகளில் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதி விளைவின் மிகையை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் அந்த சதவீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஒன்றைக் காண்பித்திருந்தது.

(ஆ) மொத்த வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே விகிதாரத்தில் தொடர்ச்சியான உயர்வைக் காட்டியதுடன் அது நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் திருப்பதிகரமான நிலையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிர்வாகம்

---

#### 2.3.1 ஆதன வரி

---

நிலுவையாக இருந்த ஆதன வரி மீதி ரூபா 1,001,480 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05வருட காலத்தை விஞ்சிய ரூபா 341,407 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

**2.3.2 வாடகை**

-------------------

நிலுவை வாடகைக் கணக்கு மீதி ரூபா 775,260 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 501,148 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

**2.3.3 ஏக்கர் வரி**

-------------------

நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 356,762 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05 வருடகாலத்தை விஞ்சிய ரூபா 104,857 மிதியும் உள்ளங்கியிருந்தது.

**2.3.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்**

------------------------------------------------

நிலுவையாக இருந்த அனுமதிப்பத்திர கட்டண மீதி ரூபா 408,685 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 339,955 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

**2.3.5 நீர்க் கட்டணம்**

---------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலுள்ள நிலுவை மீதி ரூபா 2,687,601 தொகையையும் ஆண்டிற்குரிய கட்டணம் ரூபா 2,758,107 தொகையான நிலுவையையும் உள்ளடக்கி ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 5,445,708 ஆக உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. வருமானங்களைச் சேகரிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து அமுல்படுத்துவது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,483,189 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 3,359,575 தொகையும் அறவிடவேண்டியிருந்தன. 2011 மற்றும் 2012 என்ற இரண்டு வருடங்களுக்காகவும் அறவிட வேண்டியிருந்த ரூபா 300,435 தொகையும் நீதிமன்றத் தண்டப்பண மீதியில் உள்ளடங்கியிருந்தது.

**2.4 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 677,500 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) ரத்தொட்ட மக்கள் வங்கியுடன் சபையினால் கைச்சாத்திடப்பட்டிருந்த வாடகை உடன்படிக்கை நிபந்தனையின் படி 2003 ஆம் ஆண்டு முதல் வாடகைப் பணம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மைலோ மீற்றர் செயற்பாடற்றிருந்த 03 வாகனங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 294,562 கிரயமான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட புதிய ஆதனவரி மதிப்பீட்டின் பிரகாரம் ஆதனவரி அறவிடப்படாது 2004 ஆம் ஆண்டின் ஆதன வரி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடப்படாமையால் கவனத்தில் கொள்ளக்கூடிய வருமானமொன்றை சபை இழந்திருந்தது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 11 நீர் செயற்திட்டங்களின் மூலம் 3510 நுகர்வோர்களுக்கு நீர் பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும் அதில் 47 நுகர்வோர்களுக்கு மாத்திரமே நீர்மானி பொருத்தப்பட்டிருந்தது. எஞ்சிய 3463 நுகர்வோர்களிடமிருந்து எவ்வித அடிப்படையுமின்றி கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ரத்தோட்ட பொலீஸ் விடுதி மற்றும் பொலீஸ் அமைந்துள்ள கட்டிடம் என்பவற்றிற்கு 2011 ஆம் ஆண்டின் போது முறையே மாதம் ஒன்றிற்கு ரூபா 1,750 இற்கும் ரூபா 7.500 இற்கும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைப் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1995 திசெம்பர் 27 ஆந் திகதிய 95/9 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளரின் கணக்குகள் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 179,060 தொகையான நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல வருட காலத்திலிருந்து அதிகரித்த வகையில் முன்கொண்டுவரப்படுகின்ற ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,124,957 தொகையான பங்களிப்புப் பண மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து 2006 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய தொகையாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 633,836 தொகையான மீதியை தீர்த்து வைப்பதற்கு முடியாதிருந்தது.

## 3.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 1,417,500 கிரயமான 04 வாகனங்களும் பெறுமதி கணிப்பிடப்படாத கைடெகக்ரரொன்றும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) ரூபா 703,362 செலவில் 2010 ஆம் ஆண்டின்போது நிர்மாணிக்கப்பட்ட கம்மடுவ வீதி மலர்ச்சாலை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது முடி வைக்கப்பட்டிருந்தது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டம்**

------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மாகாண எழுச்சி நிதி ஏற்பாட்டின் கீழ் ரத்தொட்ட சிறுவர் பூங்காவை நிர்மாணிப்பதற்காக ரத்தொட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சங்கத்திற்கு 2014 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 975,000 மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்த நிறுவனத்தின் பற்றுச் சீட்டில் காணப்படுகின்ற விலைகளை விட சபையின் மதிப்பீடு அதிகரித்தமையால் ரூபா 154,381 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்ததுடன் 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையும் சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 செயற்திட்டத்தின் தாமதம்**

-----------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் பண்டாரபொல சேருகொல்ல மக்களுக்கு நீரை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) நீரைச் சேகரிக்கும் தாங்கியின் பகுதியொன்று மாத்திரம் 4.3x3.0x1.17 மீற்றர் அளவில் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்திற்காக ரூபா 200,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த முற்பணத் தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 2 மெட்ரிக் தொன் அளவான கழிவுப் பொருட்கள் சபையின் டெக்ரரொன்றையும் 07 ஊழியர்களையும் ஈடுபடுத்தி சேகரிக்கப்பட்டு அதில் வேறாக்கப்பட்ட கழிவுப் பொருள் 400 கிலோகிராம் அளவு குவித்து வைக்கும் முறை மூலம் உக்கியதன் பின்னர் கூட்டுப்பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதி 80 சதவீத அளவு மீள் சுழற்சிக்கு அனுப்பப்படாது சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்தக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கீழே விபரமாகக் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 05 வருமான விடயங்களின் ரூபா 410,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 07 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 33 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 11 செலவின விடயங்களுக்கான ரூபா 2,285,000 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 32 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 08 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

## 4.4 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 16 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 138,400,436 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) பதவியணியினர் முகாமைத்துவம்
(எ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஏ) ஒப்பந்த நிருவாகம்